**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**E.A.2/2021 in E.P.No.3/2021**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 02.08.2025 | கணவர் பெயர்: | ரெத்தினகுமார் |
| பெயர்: | சரிதா<br>(PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நாங்கூர் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 45 2025 |

**1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை : 02.08.2025**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் சொத்து எனக்கு வேண்டும் என்று கேட்டுள்ளேன். அந்த சொத்தில் தற்போது கடலை விவசாயம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருப்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்த மனுவில் நான் தாக்கல்செய்துள்ளேனா என்றால் VAO சான்றிதழ் உள்ளது அதை நான் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எந்த வருடத்தில் இருந்து VAO சான்றிதழ் என்னிடம் உள்ளது என்றால் கடந்த 2021–ம் வருடத்தில் இருந்து சான்றிதழ் உள்ளது. இந்த மனு தாக்கல் செய்தது என்பது 40 ½ செண்ட் நிலத்திற்காக. மொத்தமாக 6 சர்வே எண்ணில் உள்ள சொத்திற்கு மனு தாக்கல் செய்துள்ளேன். மனு சொத்துக்கள் அனைத்தும் மீனாட்சி,கணேசமூர்த்திக்கு அவர்களது குடும்ப பாகபிரிவினையின் கீழ் கிடைக்கபெற்ற சொத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர்களுக்குள் எந்த தேதியில் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றா விபரத்தை நான் மனுவில் கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2. கடந்த 2014–ம் வருடம் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளேன். எந்த மாதம், எந்த தேதி என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்த இந்த மனுவில் தேதி, மாதம், வருடம் சொல்லவில்லை என்றால் சாட்சி மனுவை படித்து பார்த்து இல்லை என கூறுகிறார். பாகப்பிரிவினை ஏற்பட்டது என்பது எழுத்து பூர்வமானதா அல்லது வாய்மொழியானதா என்று எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் எழுதுப்பூர்வமாக ஏற்பட்டது என கூறியுள்ளேன். எனது மனுவில் மேற்படி பாகப்பிரிவினை எழுத்துபூர்வமாகவா அல்லது வாய்மொழியாகவா என விபரம் கூறப்படவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி கடந்த 2016–ம் வருடம் இறந்துவிட்டார். மனு சொத்துக்கள் ஏற்கனவே எதிர்மனுதாரரின் குடும்பத்தில் யாருடைய பெயரில் இருந்தது என்றால் பெருமாள் என்பவரின் பெயரில் இருந்தது.

3. பெருமாள் பெயரில் இருந்த ஆவணங்கள் ஏதேனும் நான் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மாமியார் செந்தமிழ்செல்வி கடந்த 2005–ம் வருடம் செப்டம்பர் மாதம் இறந்துவிட்டார். அவருக்கு இறப்பு சான்றிதழோ அல்லது வாரிசு சான்றிதழோ இந்த மனுவுடன் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் 2006–ம் வருடம் நடைப்பெற்றது. எந்த வருடத்தில் எனது குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று நான் இந்த மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 2007–ல் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் ரத்தினகுமாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை பதிவு செய்வதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் இந்த மனுவில் என்னென்ன சாகுபடி செய்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆனால் மனுவில் எந்த விபரமும் சொல்லாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. மனு சொத்துக்களை எனது மாமியார் செந்தமிழ்செல்வி அனுபவித்து வந்ததற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் அவருடைய சகோதரர் மோகன்குமார் என்பவருக்கு அறிவிப்பு அனுப்பியதாக நான் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் நான்

இம்மனுவில் அதை தாக்கல் செய்யவில்லை. அதற்கு மோகன்குமார் என்ன பதில் அனுப்பினார் என்ற விபரமும் நான் இம்மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.290–ல் மொத்த திட்ட விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 80 ½ செண்ட். சர்வே எண்.294–ல் மொத்த திட்ட விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 9 செண்ட் இருக்கும். செந்தமிழ்செல்வி உயிரோடு இருக்கும்வரையிலோ அல்லது அதன் பிறகோ கிரயம் பதிவு செய்ய அறிவிப்போ அல்லது வழக்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. ஏனென்றால் பாகப்பிரிவினை ஆகவில்லை.

5. ம.சா.ஆ.4 ஆவணம் எப்போது வாங்கப்பட்டது என்றால் 29.12.1998–ல் வாங்கப்பட்டது. 10ரூபாய் பத்திரம் நான்கு வாங்கப்பட்டது. மேற்படி பத்திரத்தில் அக்ரிமெண்ட் டைப் செய்யப்பட்டுள்ளது. அதில் ஆறுமுகம் என்ற நபர் மட்டும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் அவரது ஊர் நாங்கூர் உட்கடை. மேற்படி பத்திரம் எங்கு டைப் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை தயார் செய்தவர் மற்றும் டைப் செய்தவர் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் ஆமாம். ம.சா.ஆ.4 ஆவணம் போர்ஜரியாக தயார் செய்யப்பட்டது அதில் மீனாட்சியோ, கணேசமூர்த்தியோ கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதில் மீனாட்சிஎ எந்த மையினால் கையொப்பம் செய்தார் என்றால் அவர் கைரேகை தான் வைத்துள்ளார். மேற்படி கைரேகை ரேகை தெரியாத அளவிற்கு மையினால் மொழுகப்பட்டிருக்கிறது என்றால் இல்லை நன்றாக தெளிவாக உள்ளது.

6. மனுதாரர் இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்த பிறகு வசம் எடுக்கிற சூழநிலையில் ம.சா.ஆ.4 ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் அறிவிப்பு அனுப்பிய பிறகு இந்த நிறைவேற்று மனுவின் மனுதாரர் என்னிடம் நேரடியாக கேட்டதற்கு இந்த அறிவிப்பிற்கு தாங்கள் பதில் அனுப்ப தேவையில்லை என்றும், அவசரப்பட்டு அனுப்பிவிட்டேன் என்றும் கூறினேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணம் பதில் அறிவிப்பு அனுப்ப தகுதியற்ற ஆவணம் என்பதாலும், பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்ற சட்ட நடவடிக்கைகளை நிறுத்திவைப்பதற்கான எந்தவித முகாந்திரமும் என்னுடைய மனுவில் இல்லை என்றால் சரியல்ல.

7. ம.சா.ஆ.1 ஆவணம் நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.111/2021–ன் கையிருப்பு நகல் அந்த வழக்கு என்பது அற்பதனமானது என்றும், சட்டரீதியாக நிலைநிற்க தக்கதல்ல என்றாலும் சரியல்ல. அசல் வழக்கு எண்.111/2021–ஐ நடத்துவற்கு நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எடுத்திருக்கிறேன். வழக்கு நடத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மனுவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.நான் தாக்கல் செய்த மனு போர்ஜரியின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்பதால் சட்டபடி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. அக்ரிமெண்டின் அடிப்படையில் மனு சொத்தை யாருக்கும் விற்க முடியாது மற்றும் எவ்வித உரிமை மூலமும் கோர முடியாது என்றால் சரியல்ல. பொய்யான மனு என்பதால்தான் கடந்த 98–ம் வருடத்தில் இருந்து மனு சொத்திற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல ஆவணங்கள் உள்ளது.

8. மோகன்குமாருக்கு நாங்கள் அனுப்பிய அறிவிப்பு என்பது எங்களுக்குள் வழக்கிற்காக ஏற்பட்ட வஞ்சக கூட்டு என்றால் சரியல்ல. எனது கணவர் நான் இந்த மனுவை தாக்கல் செய்வதற்கோ அசல் வழக்கு எண்.111/2021 வழக்கை தாக்கல் செய்வாதற்கோ எவ்வித அதிகாரமும் அளிக்கவில்லை என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.111/2021 வழக்கிலும் மனு சொத்து எனது வசத்தில் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தற்போதுவரை தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணையையும் அதன் பின்னர்அதில் ஏற்பட்ட மக்கள் நீதிமன்ற இறுதிநிலை தீர்ப்பாணையையும் கேள்வி கேட்பதற்கு எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் தாக்கல் செய்த திருத்த மனுவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை தீர்ப்பில் நீதிமன்ற கட்டணம் குறித்து கேள்வி எழுப்ப எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

9. அதேபோல மக்கள் நீதிமன்ற தீர்ப்பில் ஏற்பட்டுள்ள இறுதிநிலை தீர்ப்பாணை ரத்து செய்ய கோரவும் எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எங்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதன் பிறகுதான்

சொத்தினை வசம் எடுக்க வேண்டும் என கூறியிருப்பது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. நீதிமன்ற தீர்ப்பு மற்றும் மக்கள் நீதிமன்ற தீர்ப்பு போன்ற ஆவணங்களை நான் காவல் நிலையத்தில் புகார் செய்த பிறகுதான் காவல்துறை மூலமாக எதிர்மனுதாரரிடமிருந்து பெறப்பட்டு எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சொத்தை அபகரிக்க வேண்டும் எனற நோக்கத்துடன் அரசியல் கட்சி பின்புலத்தோடும் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த வகையிலும் நான் தாக்கல் செய்த மனு நிலைநிற்க தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**( 2 மற்றும் 3–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.)**

**4, 5 மற்றும் 6–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில்குறுக்கு விசாரணை**

1. அசல் வழக்கு எண்.154/2014 என்பது கண்ணன், கணேசமூர்த்தி, மீனாட்சி, செல்வி, மனோன்மணி, சூர்யகலா ஆகியோர்களுக்கிடையே நடைபெற்ற பாகப்பிரிவினை வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கின் மொத்த விஸ்தீரணம் என்பது 81 செண்ட் என்றால் சரிதான். அதில் நான் 40 ½ செண்ட் கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். மீதமுள்ள 40 ½ செண்ட் நிலத்தை செல்வி, மனோன்மணி, சூர்யகலா ஆகியோர்கள் நீதிமன்றமூலமாக வசம் எடுத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். செல்வி, மனோன்மணி, சூர்யகலா ஆகியோர்களின் இடத்தை தவிர்த்து மீதமுள்ள இடத்திற்கு நான் மனுவை தாக்கல் செய்துள்ளேன். மனோன்மணி,சூர்யகலா செல்வி ஆகியோர் இடத்தை விட்டு விட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவிற்கு செல்வி, மனோன்மணி, சூர்யகலா ஆகியோர் அவசியமில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல.

2. மனுதாரர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணையையும் அதன் பின்னர்அதில் ஏற்பட்ட மக்கள் நீதிமன்ற இறுதிநிலை தீர்ப்பாணையையும் கேள்வி கேட்பதற்கு எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் தாக்கல் செய்த திருத்த மனுவும்

சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை தீர்ப்பில் நீதிமன்ற கட்டணம் குறித்து கேள்வி எழுப்ப எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல.

அதேபோல மக்கள் நீதிமன்ற தீர்ப்பில் ஏற்பட்டுள்ள இறுதிநிலை தீர்ப்பாணை ரத்து செய்ய கோரவும் எனக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எங்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதன் பிறகுதான் சொத்தினை வசம் எடுக்க வேண்டும் என கூறியிருப்பது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. நீதிமன்ற தீர்ப்பு மற்றும் மக்கள் நீதிமன்ற தீர்ப்பு போன்ற ஆவணங்களை நான் காவல் நிலையத்தில் புகார் செய்த பிறகுதான் காவல்துறை மூலமாக எதிர்மனுதாரரிடமிருந்து பெறப்பட்டு எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சொத்தை அபகரிக்க வேண்டும் எனற நோக்கத்துடன் அரசியல் கட்சி பின்புலத்தோடும் நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த வகையிலும் நான் தாக்கல் செய்த மனு நிலைநிற்க தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>

<u>மறு விசாரணை இல்லை.</u>